சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 27.02.2026 SC. 65/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மல்லிகா | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW 11 | | | |

---

<u>முதல் விசாரணை</u>

நான் கூடலூரில் சுக்காங்கல்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.

**(சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறி விட்டதால் நீதிமன்ற அனுமதியுடன் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.)**

<u>குறுக்கு விசாரணை</u>

கடந்த 01.03.2022 ம் தேதி இரவு சுமார் 8.30 மணிக்கு நானும், எனது பக்கத்து வீட்டில் இருக்கும் செந்தில்குமாரின் மனைவி பிரேமா என்பவரும் எங்கள் வீட்டின் முன்பு நின்று பேசிக்கொண்டிருந்தோம். ராஜாவின் வீட்டு வராண்டாவில் ராஜாவும், அவரது மனைவி வனிதா, இளைய மகன் அரவிந்த், மூன்று போரும் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது சீனாவின் அண்ணன் ஸ்டாலின் கையில் அரிவாளுடன் சிவாஜி, அவரது மனைவி ஜோதி, அவரது மகள்கள், சீனா, ரஷ்யா, ரஷ்யாவின் கணவர் சிங்கம், சிவாஜியின் தம்பி மணவாளன் ஆகியோர்கள் ராஜாவின் வீட்டு முன்னாடி நின்னுக்கிட்டு ராஜாவின் குடும்பத்தார்களை பார்த்து அநாகரிகமாக பேசி எங்க பேரகுழந்தைகளுக்கு ஒழுங்கா வீட்டை எழுதிவைக்கமாட்டீங்களா என்று அசிங்கமாக பேசினார்கள். அதேபோல் ராஜாவின் வீட்டு மாடி போசனில் குடியிருக்கும் ராஜாவின் மூத்த மகன் சுரேந்திரனும், அவரது மனைவி மீனாவும், வீட்டுக்கு கீழே வந்து அவர்கள் எல்லாரும் சேர்ந்து வீட்டுக்கு வெளியே நின்று சத்தம் போட்டுக்கிட்டு இருநது சிவாஜியின் குடும்பத்தார்களை பார்த்து, குடும்ப பிரச்சனையை வீட்டுக்கு வெளியே பேசினால் அசிங்கமாக இருக்கும், வீட்டுக்குள் வாங்க பேசிக்கலாம் என சொன்னபோது, உங்களுக்கு என்னடா மரியாதை என்று சொல்லி ஸ்டாலின் கையில் வைத்திருந்த வீச்சருவாளுடன்

ராஜாவின் வீட்டு வராண்டாவுக்குள் நுழைந்து வீட்டு வராண்டாவில் நின்று அரவிந்தின் கழுத்தை வெட்டபோகும்போது, அரவிந்த் கையால் தடுத்து அரிவாள் அரவிந்தின் இடது கையில் பட்டு மணிக்கட்டிலிருந்து துண்டாகி கீழே விழுந்துவிட்டது. தடுக்க சென்ற அவரது அப்பா ராஜாவையும், ஸ்டாலின் அரிவாளல் வெட்டி, ராஜாவுக்கு இடது முழங்கைக்கு கீழே வெட்டுக்காயம் ஏற்பட்டுவிட்டது. அப்போது அங்கிருந்த நாங்கள் எல்லோரும் சேர்ந்து சிவாஜியையும், ஸ்டாலினையும் சத்தம் போட்ட போது அவர்கள் 2 பேரும், வீட்டுக்கு வெளியே வந்து சிவாஜியையும், அவரது மருமகன் சிங்கம், சிவாஜியின் தம்பி மணவாளனும் சேர்ந்து ராஜாவை ரோட்டில் இழுத்துபோட்டு கையால் அடித்தனர். சிவாஜியின் மனைவி ஜோதி மகள்கள், சீனா, ரஷ்யா மூவரும் ராஜாவின் மனைவி வனிதாவை கையால் மாறி மாறி அடித்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர். இரத்தம் காயம் பட்ட அரவிந்தையும், ராஜாவையும், அவர் மகன் சுரேந்திரனும், எங்கள் தெருவில் வசிக்கும் மித்ரனும் சேர்ந்து ஆளுக்கொரு பைக்கில் ஏற்றிக்கொண்டு கம்பம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு இன்று எதிரிகக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஓம்).M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி
உத்தமபாளையம்